22.08.2025

O.S.No. 157/2021

PW1– மணிவர்மன்– த/பெ. பெருமாள்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.08.2025

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( பிரதிவாதி தரப்பில்)

3. நான் வழக்கல் கோரியுள்ள முதல் பரிகாரம் என்னவென்றால் பாதையில் உள்ள அடைப்பை திறக்கவேண்டி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இரண்டாவது பரிகாரமாக நான் என்ன கேட்டுள்ளேன் என்றால் எனது அனுபவம் வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் பரிகாரமும், இரண்டாவது பரிகாரமும் முற்றிலும் மாறுபட்டது என்றால் சரியல்ல. மாறுபட்ட பரிகாரங்கள் கேட்க எனக்கு எந்த வழக்குமூலமும் கிடையாது என்றால் சரியல்ல. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்து பாகபிரிவினை செய்யப்பட்டது என்றால் 60 ஆண்டுகளுக்கு முன்பிருக்கலாம். எனக்கு விவரம் தெரிந்த காலம்முதல் நான் தாவா பாதையை பயன்படுத்திவருகிறேன். 30 ஆண்டுகளுக்கு முன்பு என்று என பிராதில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

4. பிரதிவாதியின் தகப்பனார் இறந்த விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படும்போது பிரதிவாதியை அழைத்தேன், பிரதிவாதி வந்தார், பின்பு பாதையில் சென்றுவிட்டார். அதனால் எங்கள் சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான்.

5. தாவா சொத்து வா.சா.ஆ.3 ஆவணத்தில் C3 தபசிலாக உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2ம் தபசில் குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. அதில் உள்ளது. பிராதில் வா.சா.ஆ.3ன்படி ஆவணவிவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தற்போது வா.சா.ஆ.3 வாங்கி பார்த்துவிட்டு 2ம் தபசில் பிராதில் உள்ளவாறு வா.சா.ஆ.3ல் இல்லை என கூறினார். வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி தான் தபசில் விவரம் 2ம் தபசிலில் உள்ளது.

6. வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுததுமபோது பிரதிவாதிகளை அழைக்கவில்லை என்றால் சரியல்ல. பலமுறை அழைத்தேன், எனது அழைப்பை ஏற்கவில்லை. எனக்கு மின்சார இணைப்பு அவசியமாக இருந்ததால் வா.சா.ஆ.4யை ஏற்படுத்தினேன். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை பொறுத்து ஆளுநருக்கு ஆவணம் எழுதிவைக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சொத்துவிவரமும், வா.சா.ஆ.3ல் உள்ள சொத்துவிவரமும் தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3,4 ஆவணங்கள் நாங்களாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்காக நான் 10அடி பாதை கிழக்கே மற்றொரு இடத்தில் கொடுத்துள்ளேன், ஆனால் பிரதிவாதிதான் வரமறுத்துவிட்டார்.

7. வா.சா.ஆ.3 ஆவணத்தில் C3 தபசில் படி எனக்கு 10.10 செண்ட் உரிமையுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் நன்கொடையாக கொடுத்துள்ள பாதை எத்தனை செண்ட் என்றால் சாட்சி வா.சா.ஆ.4 ஆவணத்தை வாங்கிபார்த்துவிட்டு 2 செண்ட் இருக்கும் என கூறினார்.

8. ஆணையர் அறிக்கையின் விவரம் எனக்கு தெரியும். ஆணையர் அறிக்கைப்படி பிராது 1ம்தபசில் சொத்தாக நான் சொல்லியுள்ள பகுதி 11.80 செண்ட் இருக்கிறது என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் சொத்தாக நான் சொல்லியுள்ள பகுதி 3.00 செண்ட் இருக்கிறது என்றால் சரிதான். எனது கட்சியின்படியும், வா.சா.ஆ.3ன்படியும் 10.10 செண்ட் இருக்கும்போது அதற்கு மேல் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் நான்குமாலுக்கு சுவர் எழுப்பினார். அதனால் நான் அதை பெரிதுப்படுத்தவில்லை. தற்போது பாதையை அடைத்துவிட்டதால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காகதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தான் வா.சா.ஆ.3,4 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மையப்பகுதியை தான் வா.சா.ஆ.4 ஆவணத்தின் பாதையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். இதனால் பிரதிவாதிகளின் அளவுகளும் குறைகிறது என்றால் நான் பிரதிவாதியை பலமுறை கேட்டேன், பிரதிவாதிதான் ஒத்துழைக்கவில்லை. அதனால் வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினேன். ஏன் நீதிமன்றத்தை நேரடியாக அணுகவில்லை என்றால் பிரதிவாதிதான் மத்தியில் உள்ள பாதையை ஒதுக்கினார், அதனால் தான் வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினேன். எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

9. ஆணையர் அறிக்கை பிராதின் அடிப்படையில்தான் ஸ்தல பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

ஸ்தலத்தில் பிராதில் உள்ளவாறு பிரதிவாதி சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனதுஇடத்திற்கு Alternate பாதை உள்ளது என்றால் சரியல்ல. எனதுஇடத்திற்கு மேற்கே தென்வடல் பாதை உள்ளது என்றால் சரியல்ல. எனது தரப்பு சாட்சியாக எனதுபெரியப்பா மகன் செல்வராஜை அழைத்துவர தயாராக உள்ளேன். பிரதிவாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யும்நோக்கோடு வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்திவிட்டு நான் கோரும் வசதி உரிமை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது 2 ம்தபசில் சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பாதை வேண்டும் என்றால் வசதி உரிமை வேண்டி மட்டுமே தாக்கல் செய்திருக்க வேண்டும், மேலும் நான் கோரும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10. நான்கோரும் 3 வது பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3,4 ஆவணம் தொடர்பாக பிரதிவாதி என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அலைபேசியில் அழைத்தார்கள், அலைபேசியிலேயே விசாரணை முடிந்தது, உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டனர். வா.சா.ஆ.3,4 ஆவணம் தொடர்பாக பிரதிவாதிகள் சட்டப்பிரிவு 77A—ன் கீழ் பதிவுத்துறைச்சட்டத்தின் கீழ் புகார்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதுபோன்ற எந்த தகவலும் வரவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எனக்குரிய மேற்குபக்க பாகத்தை கிரையம் கொடுக்க வேண்டி என்னை நிர்பந்தம் செய்தார்கள் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. பிரதிவாதிகளுக்குரிய இடத்தில் 30 ஆண்டுகளாக மாட்டுத்தொழுவம் அமைத்து பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. சுமார் 10 முதல் 12 அடி அகலத்தில் மாட்டுத்தொழுவம் அமைத்து ஒரு ஆழ்துளை கிணறும் அமைத்து 10, 15 ஆண்டுகளாக பயன்படுத்திவருகிறார்கள். ஆணையர் அறிக்கையில் 2 ம்தபசில் தான் மேற்படி ஆழ்துளை கிணறு வருகிறது என்றால் சரியல்ல.

12. பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ராஜமணி என்றும் அருணாச்சலம் என்றும் அழைப்பார்கள். பிரதிவாதியின் தகப்பனார் எனது சித்தப்பா என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதியின் தகப்பனார் பெயரை என்னவென்று போட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் பிரதிவாதிகளின் தோட்டத்திற்கு செல்லக்கூடிய மின்இணைப்பை தடைசெய்து தொந்தரவு செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கேயுள்ள பாதையை தடைசெய்து இடையூறு செய்கிறார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி அவர்களின் அனுபவத்தை இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. பிராது 2 ம்தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லாத நிலையில் இந்த வழக்கில் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி –**

1. தாவா சொத்து எனது தந்தைக்கும், எனது சித்தாப்பாவிற்கும் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது. பட்டாக்கள் அனைத்தும் கூட்டுப்பட்டாவாக உள்ளது.

2. 15.10.2019 தேதியிட்ட ஆவணம் கூட்டுப்பட்டாவின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் ஏற்படுத்தப்பட்டது. எங்களுக்கு தனிப்பட்டா கிடையாது.

3. 03.10.2020 தேதியிட்ட ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையிலேயே வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது.

4. நான் இப்போதும் சமரசம் பேச தயாராக தான் உள்ளேன்.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.